**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**OS.No.3/2024- PW-1**

| | | | |
|---|---|---|---|
| Name | திருமதி.பானுமதி | District | திருவண்ணாமலை |
| Husband Name | திரு.வேலு | Occupation | -- |
| Village /Area | பிள்ளான்தாங்கள் | Age | 77 |
| Taluk | வெம்பாக்கம் | Aadhar Card No. | 6683 8703 9902 |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **23.02.2026.**

**முதல் விசாரணை:**

நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். நான் இன்று தாக்கல் செய்யும் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்துகள் என்னுடைய கையெழுத்துகள் தான். அந்த நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் என்னால் என் வழக்கறிஞருக்கு சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டுள்ளது. அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். 21.11.1945 தேதியிட்ட காலம் சென்ற திரு.முனுசாமி பெயரிலுள்ள கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆகும். 26.02.1979 தேதியிட்ட பலராமன் 1-ம் பிரதிவாதியின் மீது ஏற்படுத்திய செட்டில்மெண்ட் ஆவணம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2** ஆகும். 16.02.2005 தேதியிட்ட 4-ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த ஒப்புதல் கடிதம் அசல் **வா.சா.ஆ.3** ஆகும். 16.02.2005 தேதியிட்ட 1-ம் பிரதிவாதி, 4-ம் பிரதிவாதியின் பெயரில் ஏற்படுத்திய கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.4** ஆகும். 18.04.2005 தேதியிட்ட 4-ம் பிரதிவாதி, 6-ம் பிரதிவாதியின் கணவரின் பெயரில் ஏற்படுத்திய கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.5** ஆகும். 22.08.2023 தேதியிட்ட 1 முதல் 12 வாதிகள், பிரதிவாதிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு அலுவலக நகல் **வா.சா.ஆ.6** ஆகும். 12.09.2023 தேதியிட்ட 1-ம் பிரதிவாதி அறிவிப்பினை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.7** ஆகும். 09.09.2023 தேதியிட்ட 7-ம் பிரதிவாதி அறிவிப்பினை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை மற்றும் மற்ற பிரதிவாதிகள் சட்ட அறிவிப்பினை வாங்க மறுத்து திரும்ப வந்த அஞ்சலக கடித உறைகள் **வா.சா.ஆ.8** ஆகும். பிராதுப்படி தீர்ப்பாக வேண்டிக்கொள்கிறேன்.

BALAKRISHNAN

Digitally signed by BALAKRISHNAN
DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District Judge,
Ranipet.